மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடத்தில் இதற்காகக் கடிதப் போக்குவரத்து நடத்தியிருப்பதால் அவர்களின் மூலம் நிதி உதவி கிடைத்தவுடன் உறுப்பினரின் எண்ணங்கள் நிறைவேற்ற முயற்சிக்கப்படும்.

Fish sales centres

*** 38 Q.—Thiru N. DENNIS :** Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that a fish sales counter has been opened by the Government at Teynampet, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) தேனாம்பேட்டை நிர்வாக அலுவலகக் கட்டிடங்களின் எல்லைக்குள் எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் (இந்திய அரசு) ஒரு பதனப்படுத்தப்பட்ட மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மீன் விற்பனை நிலையத்திற்கு மீனளத்துறையினரால் ஒரு தற்காலிகக் கட்டிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான சாதனங்களையும் பணியாளர்களையும் இந்திய-நார்வே திட்டத்தினர் அளித்துள்ளனர்.

Thiru N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether there is export by package through this counter?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த நிலையத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முறை இருக்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சென்னை நகரத்தில் நல்ல தரமான மீன் ஒரு கிலோ 5 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் தாராளமாக மீன் உற்பத்தியாகின்ற நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களில் ஒரு கிலோ 10 ரூபாய்க்குக் கூடக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த ஜில்லாக்களில் அரசாங்கம் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் மூலம் தேனாம்பேட்டையில் பதனப்படுத்தப்பட்ட மீன் விற்கும் நிலையம் ஆகும். உறுப்பினர் அவர்கள் கூறிய நெல்லைக்கு மண்டபத்தில் இருக்கும் மீன் தனியார் துறை மூலமாகவும், வேறு இதேபோன்ற குளிர் பதனப்படுத்திவைக்கும் முறையில் நமது மாநிலத்தில் மண்டபத்தில் விற்கப்படுகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, கடற்கரை ஓரமாக நிறைய மீன் கிடைக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஆனால் கடற் கரைக்கு அப்பால் 100 மைல்கள் தாண்டியுள்ள பகுதிகளில் கடற்கரைகளி லுள்ள மீன்களும் கிடைப்பதில்லை, நீர்நிலை வற்றிவிட்டதால் அந்த மீன்களும் கிடைப்பதில்லை. எனவே எந்த ஒரு மீனாவது கிடைப்பதற்கு வேண்டிய வழி முறைகளை அரசு செய்யுமா? 3, 4 வருஷங்களாக எங்கள் பகுதியில் மீன் கிடைப்பதில்லை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There is a fish depot near Chetpet bridge. I do not think fish is really sold to the people there. Would the Government think of at least closing it down or make it more competitive?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அங்கே இருப்பது மீன் விற்பனைக் காக இருக்கின்ற நிலையம் அல்ல. நான் கூறுகின்ற நிலையம் மீன் விற்பனைக்காக இருக்கின்ற நிலையம். விற்பனைக்காக இருக்கின்ற இடம் மூலமாகத்தான் இதையெல்லாம் செய்யக்கூடும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கே மீன் விற்கப்படுகிறது. நானே சில சமயங்களில் அங்கேயிருந்து வாங்கியிருக்கிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள் அது எப்படி நடத்தப்படுகிறது என்பதை ஆராய்வதற்கு வழி செய் வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆராய்ச்சி நிலையங்களில்கூட சில இடங்களில் மீன்களை விற்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் மீன்களை வாங்கியிருக்கலாம். ஆனால், விற்பனைக்காக என்று குறிப்பாகச் சில இடங்கள் இருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether prawns would be made available for the local consumers because prawns are now exported to foreign countries and it is not available here? Will the Government take steps to see that local consumers' needs are met?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்கு முற்றிலும் மாறான கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்கிறேன். இறால் மீன்கள் அதிக மாக அயல் நாடுகளுக்குத்தான் அனுப்பப்படுகின்றன. நம்முடைய மாநில மக்களுக்கு இறால் மீன்கள் கிடைக்கின்ற வகையில் இன்னும் ஏற்பாடு செய்ய

வில்லை. இன்னும் துறைமுகங்கள் அதிகப்படுத்தப்பட்டு, இயந்திர சாதனங்கள் கிடைக்கப் பெற்றவுடன் நம்முடைய மாநில மக்களுக்குக்கூட இரால் மீன்கள் வழங்கப்படும்.

* 39. வினு—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மண்டபம் பகுதியில் கிடைக்கும் உணவுக்கான மீன்களை விற்பனை செய்ய மதுரை போன்ற நகரங்களில் விற்பனைக் கூடங்கள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. காளிமுத்து : இனியாவது அதைப் பரிசீலித்து அப்படி விற்பனைக் கூடங்களைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது மதுரை போன்ற இடங்களில் விற்பனைக்காக கூடங்கள் இருக்கவில்லை என்றாலும், நான் சற்று முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் கூறியதுபோல மண்டபத்திலிருந்து குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து மீன்களைக் கொண்டுவந்து மதுரை, திண்டுக்கல், விருதுநகர், பாளையங்கோட்டை, நெல்லை போன்ற பகுதிகளில் எல்லாம் மீன்கள் விற்கப்படுகின்றன. தனிப்பட்டவர்கள்கூட மண்டபத்திலிருந்து கொண்டுவந்து மதுரையில் மீன்களை விற்கிருர்கள். மதுரையில் அரசாங்கத்தின் சார்பிலே விற்பனைக் கூடம் இருக்கவில்லை.

திரு. கோவை செழியன் : மண்டபப் பகுதியிலே மீன்களோடு கடற் கன்னிகள் கிடைத்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இரண்டு கடற் கன்னிகள் மண்டபத்தில் இருப்பதாகச் சொல்கிருர்கள். அவைகள் இருக்கின் றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்று பார்க்கலாம்.

மண்டபத்திலுள்ள மீன் பதனிடும் தொழிற்சாலை

* 40. வினு—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இந்திய-நார்வே மீன் பிடிக்கும் திட்டத்தின்கீழ் மண்டபத்தில் அமைந் துள்ள மீன் பதனிடும் தொழிற்சாலையைத் தனியார்க்கும் வாடகைக்கு விடும் உத்தேசம் உண்டா ?